வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். STC. 418/2018

வழக்கு சாட்சி **பு.த.சா.**1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | பவுல்மாணிக்கம் | : | | |
| தந்தை/கணவர் பெயர் | ஆரோக்கியசாமி | : | தொழில் | ஆசிரியர் (ஓய்வு) |
| கிராமம் | திருவையாறு | : | | |
| தாலுக்கா | திருவையாறு | : | வயது | 70/2024 |

**நாள் : 18.10.2024**

**முதல் விசாரணை :**

நான் நீதிமன்றத்தில் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்கிறேன்.

**1) 29.03.2018 ம் தேதிய எதிரியால் எனக்கு சட்டப்படியான கடனை தீர்க்கும் பொருட்டு வழங்கப்பட்டு எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இன்றி திருப்பப்பட்ட சிட்டி யூனியன் வங்கி, தஞ்சாவூர், கென்னடி சதுக்க கிளை காசோலை எண். 000057 ன் அசல் பு.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2) 02.06.2018 ம் தேதியிட்ட Return Memo அசல் பு.த..சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3) 28.06.2018 ம் தேதியிட்ட நான் எதிரிக்கு மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்**

பிரிவு 138(b)ன்படி அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் பு.த..சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 28.06.2018 ம் தேதியிட்ட Postal Receipt அசல் பு.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 02.07.2018 ம் தேதியிட்ட ஒப்புதல் அட்டை அசல் பு.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 05.03.2015 ம் தேதியிட்ட எனக்கு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட உறுதிமொழி பத்திரம் அசல் பு.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 16.07.2018 ம் தேதியிட்ட எதிரியால் எனது வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு அசல் பு.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.